தி இந்து 28/02/2017

அரியலூர் மாவட்டத்தில்

# நீரேற்று நிலையங்களை ஆட்சியர் ஆய்வு

அரியலூர்

அரியலூர் மாவட்டம் நதியனூர், தா.பழூர், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளிலுள்ள குடிநீர் வழங்கும் நீரேற்று நிலையங்கள், நீர் உறிஞ்சு கிண்றுகளை ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் நேற்று ஆய்வு செய்தார்.

அப்போது அவர் தெரிவித்தாவது: அரியலூர் மாவட்டத்தில் கோடைக்காலங்களில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் திருமானூர், தா.பழூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய ஒன்றியத்துக்கு உட்பட்ட 20-க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் மற்றும் குக்கிராமங்களுக்கு நதியனூர் கொள்ளிடம் ஆற்றில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு 4.5 மீட்டர் அகலமும், 8 மீட்டர் ஆழமும் கொண்ட கிணற்றிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் சுமார் 7,13,680 லிட்டர் நாள் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, மகளிர் திட்ட அலுவலர் கதிரவன், உதவி நிர்வாக பொறியாளர் நாகானந்த், நீர்நிலை ஆய்வாளர் தர்மலிங்கம், உதவி பொறியாளர் சிவசங்கரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.